செ. வெ. எண் - 1002 நாள் 18-11-08

# மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை

## மழைக்கால நோய் தடுப்பு நடவடிக்கைகள்

தமிழ் நாட்டு மக்கள் நோய் நொடி இன்றி வாழ பல்வேறு நலத் திட்டங்களை தமிழக அரசு சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. தேசீய ஊரக நலத் திட்டத்தின் கீழ் பல்வேறு பணிகள் முடுக்கிவிடப்பட்டு தரம் மேம்படுத்தப்பட்டுள்ளதால் அதிக அளவில் அரசு ஆரம்ப சுகாதாரநிலையங்களை மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

பருவகால மழைக்கு பின்னர் பூச்சிகளால் பரவும் நோய்களான டெங்கு, சிக்குன்குன்யா, மலேரியா மற்றும் லெப்டோஸ்பைரோஸிஸ் (அ) எலிக்காய்ச்சல் போன்ற நோய்கள் பரவும் அபாயம் உள்ளது. இதுபற்றி கலந்தாய்வு செய்ய 11.11.2008 அன்று மாநில அளவில் சென்னையில் பூச்சியியல் வல்லுநர்களின் கலந்தாய்வுக் கூட்டம் இயக்குநரால் நடத்தப்பட்டது. அக்கூட்டத்தில் மாவட்டந்தோறும் நடைபெற்று வரும் டெங்கு, சிக்குன்குனியா, மலேரியா மற்றும் எலிக்காய்ச்சல் போன்ற நோய் தடுப்பு நடவடிக்கைகள் பற்றி விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தமிழக அரசின் உத்தரவின்பேரில் 3850 தற்காலிக பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டு, மேற்கண்ட நோய்கள் பரவாமல் தடுக்கும்பொருட்டு கொசுப்புழு ஒழிப்பு மற்றும் கொசு ஒழிப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறையின் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளின் பலனாக சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு பூச்சிகளால் பரவும் நோய்களின் தாக்கம் மிகவும் குறைந்துள்ளது. இருந்தபோதிலும் எல்லாவித தடுப்பு நடவடிக்கைகளும் மாவட்டங்களிலும் செவ்வனே நடைபெற அனைத்து அலுவலர்களுக்கும் உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. டெங்கு மற்றும் சிக்குன்குன்யா காய்ச்சலை பரப்பும் கொசுக்கள் உற்பத்தியாகும் இடங்களான பிளாஸ்டிக் டிரம்கள், ஆட்டு உரல், டயர்கள், உடைந்த பானைகள் ஆகியவற்றை அப்பறப்படுத்தவும் வாரம் ஒருமுறை பார்வையிட்டு கொசுப்புழு ஒழிப்பு மருந்து தெளிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும், தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள தேவையான உபகரணங்கள், புகையடிக்கும் இயந்திரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள் ஆகியவை போதிய அளவு இருப்பு வைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், பொது மக்கள் காய்ச்சல் கண்டால் உடனடியாக அருகிலுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையம் / அரசு மருத்துவமனைக்கு சென்று தக்க சிகிச்சை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.



====

வெளியீடு, இயக்குநர்,
செய்தி மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9